**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070220225824

Volume: 7

Issue: 2

Month: October

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.07.2022

Accepted: 02.09.2022

Published: 01.10.2022

Citation:
Rupa, A. "Weaving and Folklore." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 2, 2022, pp. 43–48.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i2.5824

*Corresponding Author:
arupa740@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Weaving and Folklore

**Dr. A. Rupa**
*Assistant Professor, PG Department of Tamil*
*Adhiyaman Arts and Science College for Women*
*Srinivasa Nagar, Uthangarai*
*https://orcid.org/0000-0003-0732-6540*

**Abstract**
There are two types of literature that have appeared in Tamil language. They are written texts. Unwritten folklore.i.e. folk literature. Attilakyas are divided into several categories according to the period such as Sangam literature, Sangam Maruviya literature, medieval literature, devotional literature, modern literature, historical literature, small literature, barilyakya from the early period. In this way, it can be known through many studies that there are many elements of folklore in Sangam literature. This article seeks to examine the extent to which Neydhil Kali has folkloric elements in Kalim.

**Key Words:**
Folklore, Folk Literature, Sangam Literature, Medieval Literature, Neither Kali, Nattupuraviyal.

**References**
1. Su. Sakthivel - Study of Folklore
2. Nedunalvadai - ncbh
3. Kalithogai - ncbh
4. V. Perumal, Multipurpose Proverbs
5. Tolkappiyam
6. De. Lourdes, Natar Jurisprudence
7. Thirupathur Mavatta Palamozhigal

# நெய்தற் கலியும் நாட்டுப்புறவியலும்

*முனைவர் ஆ. ரூபா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சீனிவாசா நகர், ஊற்றங்கரை

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் மொழியில் தோன்றியுள்ள இலக்கியங்களில் இரண்டு வகை காணப்படுகின்றன, அவை எழுதப்பட்ட ஏட்டிலக்கியங்கள். எழுதப்படாத நாட்டிலக்கியங்கள்.ஏட்டிலக்கியங்கள் துவக்க காலத்தில் இருந்து சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியம், இடைக்கால இலக்கியம், பக்தி இலக்கியம், நவீன இலக்கியம், வரலாற்று இலக்கியம், சிற்றிலக்கியம், பேரிலக்கியம் என்று காலத்திற்கு ஏற்பப் பல வகைகளாகப் பகுக்கப்படுகின்றன. சங்க இலக்கியமான கலித்தொகையில் நாட்டுப்புறவியல் கூறுகள் ஏராளமாகப் பொருந்தியுள்ளன என்பதை ஆய்வின் ஊடாக அறியலாகிறது. இக்கட்டுரை கலித்தொகையில் நெய்தற்கலி எவ்வெவ் நாட்டுப்புறவியல் கூறுகளைக் கொண்டுள்ளது என்பதை ஆராய முற்பட்டுள்ளது.*

***முக்கியச்சொற்கள்:*** *நாட்டுப்புற இலக்கியங்கள், நாட்டுபுற இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள், நெய்தற் கலி.*

## கலித்தொகை

எட்டுத்தொகை நூல்களில் யாப்பு வகையால் பெயரமைந்தவை பரிபாடல், கலித்தொகை. தொல்காப்பிய அகப்பொருட் செய்திகளைப் பாடுதற்குரிய பாக்களாகப் பரிபாடல், கலி இரண்டையும் குறிப்பிட்டுள்ளார். என்றாலும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இந்தப் பாடு பொருள் இருந்தமையை “என்மனார் புலவர்” என்ற தொடரால் அறியலாம். 150 பாடல்களைக் கொண்ட கலித்தொகையில் நாட்டுப்புற பாடல்களில் யாப்பு மட்டுமின்றி நாட்டுப்புற வடிவமும் இடம் பெற்றுள்ளது.

பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தற்கலி என்று ஐந்து வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ள கலித்தொகையில் நெய்தற்கலி 118 வது பாடல் முதல் 150 வது பாடல் வரை 33 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். இந்நாட்டுப்புறவியலை அறிஞர்கள் பலர் பல வகைகளாகப் பகுக்கின்றனர். நாட்டுப்புறவியலைப் பொதுவாக இரண்டு வகைகளாகப் வகைப்படுத்தலாம். ஒன்று நாட்டுப்புற இலக்கியம், மற்றொன்று நாட்டுப்புற கலைகள், நம்பிக்கைகள் என்று பிரிக்கலாம். நாட்டுப்புற இலக்கியம் என்பதில் நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புற கதைகள், நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், புராணங்கள் என்று மேலும் வகைப்படுத்துகின்றனர்.

## பழமொழி

“மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி, நினைப்பிற்கும் எட்டாத பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதைப் பழமொழியிலுள்ள மொழி என்னும் சொல் குறிக்கிறது.” (சு.சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு)

தமிழில் பழமொழிக்கு மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல் என ஆறுபொருள் இருப்பதாக சேந்தன் திவாகரம் குறிப்பிடுகிறது. பழகுமொழி, தொன்னெறி மொழி, முதுமொழி, முதுசொல், தொன்றுபடு கிளவி, தொன்றுபடு பழமொழி, பழமொழி, வாய்மொழி, அறம், நெடுமொழி என்று முப்பத்திநான்கு சொற்கள் இருப்பதாக வ.பெருமாள் குறிப்பிட்டுள்ளார். பழமொழி நாட்டுப்புற மக்களால் வழங்கப்பட்டு வந்த மொழி என்பதை அவற்றின் பெயரை வைத்து அறிந்து கொள்ளலாம். நாட்டுப்புற மக்களின் வடிவமான இம்மொழி நெய்தற் கலியிலும் இடம் பெற்றுள்ளது.

தலைவனும் தலைவியும் பிரிந்து இருக்கும் காலத்தில் அனைத்தும் நெடியது போல் தோன்றும் என்று நெடுநல்வாடை நீண்ட நெடிய வாடை என்னும் பொருளில் குறிப்பிட்டுள்ளது. அதேபோல் இங்கும் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு மாலைக்காலம் மேலும் வருத்தத்தைத் தருகிறது. அம்மாலைப் பொழுதைப் பார்த்து தலைவி "மாலைக் காலமே, நீ, என் நெஞ்சத்தைத் தம்மிடத்தே கொண்டு நீங்கினவர் எனக்குத் துணை தாராமல் இருக்கின்ற நேரத்திலே வெள்ளத்தில் அகப்பட்டுக் கரையேற மாட்டாத மானின் மருமத்தைப் பார்த்து அம்பைத் தொடுக்கும் கொடியவனைப் போல, துன்பத்திலே அழுந்தியிருக்கின்ற என்னைக் கையறவு எய்துவிக்க வந்தாயோ? நீ கொடிய மாலையாக இருந்தாய்" என்று தலைவி குறிப்பிடுகிறாள். இவை

> **"மாலை நீ - கந்து ஆதல் சான்றவர் களை தாராப் பொழுதின்கண்**
> **வெந்தது ஓர் புண்ணின்கண் வேல் கொண்டு நுழைப்பான் போல்"**

**பாடல் - 120**

என்று இடம் பெற்றுள்ளது. நாட்டுப்புற மக்கள் இக்கருத்தினை

**"வெந்த புண்ணில் வேலை பாய்ச்சாதே"**

என்று குறிப்பிடுவர்.

மேலும் "எருது நோய் காக்கைக்குத் தெரியுமா?" என்றும் விலங்கினை வைத்து பழமொழியாக நாட்டுப்புற மக்கள் கூறுவர். இவ்வடிவத்தை மேற்கண்ட பாடலானது பெற்றுள்ளது.

தலைவன் தலைவியைப் பிரிந்து இருக்கும் காலங்களில் பிரிவு ஆற்றாமையால் தலைவி வருந்தி நிற்கிறாள். தலைவன் வந்தால் தனக்குப் படர்ந்துள்ள பசலை தீர்ந்து விடும் என்று தலைவிக்குத் தெரிந்தாலும் அவளால் ஆற்றியிருக்க இயலவில்லை. இவ்வருத்தத்தை கடலை நோக்கிக் கூறுவது போல் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

> **"ஓஓ!கடலே! ஊர் தலைக்கொண்டு கனலும் கடுந் தீபுள்**
> **நீர் பெய்தக்காலே சினம் தணியும், மற்று இஃதோ**
> **ஈரம் இல் கேள்வன் உறீஇய காமத்தீ**
> **நீருள் புகினும், சுடும்."**

**பாடல் - 144**

என்று குறிப்பிடுகிறது. இவை "பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழியின் வடிவத்தையும் "ஆனைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும்" என்ற பழமொழியின் பொருளையும் உட்பொதித்து காணப்படுகிறது. ஆ நெய் சாப்பிடும் காலம் ஒரு காலம். பூ நெய் சாப்பிடும் காலம் ஒரு காலம். அதுபோல் தலைவன் திரும்பி வந்தால் இந்தப் பசலைப் தீர்ந்து விடும். ஆனால் இந்நேரத்தில் கடலிலே இறங்கினாலும் இந்தக் காம நோயைத் தீர்க்க இயலவில்லையே என்று தலைவி வருந்துவதை எடுத்துரைக்கிறது.

**நம்பிக்கைகள்**

பண்டைக்காலம் முதல் மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வருகின்றான். இயற்கையின் மாறுதலுக்கு ஏற்ப மனிதனின் மனமும் மாறி வருகின்றன. ஆனால் நம்பிக்கை என்பது மட்டும் மாறாமல் அவ்வாறே உள்ளது. உலகெங்கிலும் வாழும் பழங்குடி மக்கள் அனைவரும் இயற்கையோடு இயைந்த வாழ்வியலையும் நம்பிக்கையையும் உடையவர்களாக வாழ்ந்து வந்தனர். வாழ்ந்து வருகின்றனர். இவற்றைத் தொல்காப்பியர்

**"நாளும் புள்ளும் பிறவற்றினிமித்தமும்"**
**தொல்.புறம் [91]**

குறிப்பிடுகின்றது. இந்நம்பிக்கை விலங்கு, பறவை, சகுனம், தெய்வம் பல வகைகளாகப் பகுக்கப்படுகின்றன.

**தெய்வம் பற்றிய நம்பிக்கைகள்**

மாலை நேரத்தில் விளக்கு ஏற்றுதல், பூசை அறையில் பல்லி இருந்தால் குல தெய்வத்தின் ஆசியுள்ளது போன்று பல நம்பிக்கைகள் தெய்வம் பற்றி மக்களுக்குக் காலம் காலமாக இருந்துள்ளது என்பதை இவை எடுத்துரைக்கின்றன. அவ்வளவே நெய்தற் நிலத்தில் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி மாலை நேரத்தில் விளக்கு ஏற்றி தெய்வத்தை வழிபட்டால் தலைவன் விரைந்து வருவான் என்று எண்ணி விளக்கு ஏற்றி இறைவனை வழிபடுகிறாள். அவை

**"அந்தி அந்தணர் எதிர்கொள, அயர்ந்து**
**செந்தீச் செவ்வழல் தொடங்க - வந்ததை"**
**பாடல் 119**

வெளிப்படுத்துகிறது.

இக்கருத்தினை நெடுநல்வாடையும்

**"மடவரல் மகளிர் .. பொழுதறிந்து**
**இரும்பு செய்விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ**
**நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது**
**மல்லல் ஆவணம் மாலைஅயர"**
**(நெடுநல்வாடை)**

குறிப்பிடுகிறது.

தலைவன் பிரிவால் வாடிய தலைவி தன் தலைவனைத் தன்னோடு சேர்ப்பிக்க வேண்டும் என்று இயற்கை தெய்வமான ஞாயிற்றையும், காமத்தின் கடவுளான காமனையும், ஊரில் உள்ள தெய்வங்களையும் வணங்கி வேண்டுகிறாள்.

**"ஆறு அல்ல மொழி, அற வினை கலக்கிக்**
**தேறுகள் நறவு உண்டார் மயக்கம் போல், காமம்.**
**(பாடல் - 147)**

இப்பாடலும் தெய்வத்தின் மீது தலைவி வைத்த நம்பிக்கையையும் அக்காலத்திலும் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் காணப்படுகிறது என்பதை அறியமுடிகிறது.

**கனவு பற்றிய நம்பிக்கை**

கனவுகள் மக்களுக்கு வாழ்வில் பின் நிகழப்போவதை முன்னர் உணர்த்துகின்றன என்று நம்புகின்றனர். உளவியல் பேரறிஞர்கள் அடக்கி வைக்கப்பட்ட விருப்பத்தின் மறைமுகமான வெளிப்பாடே கனவு என்பர். வேறு சிலர் கனவு என்பது உள நோயால் தோன்றுகிறது என்றும் கூறுவர். இக்கனவை நல்ல கனவு என்றும் கெட்ட கனவு என்றும் வகைப்படுத்துவர். அதே போல் அதிகாலையில் கனவு கண்டால் பலிக்கும் என்றும் கூறுவர். (சு.சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு)

கனவில் பாம்பு கண்டால் நல்லது, பெண்கள் வந்தால் நல்லதல்ல, ஆமை வந்தால் அதிர்ஷ்டம் வரும் என்று பல நம்பிக்கைகள் உண்டு. தலைவி தலைவனைப் பிரிந்திருக்கும் பொழுது தலைவியும் தலைவனும் கனவில் ஒருவரோடு ஒருவர் உரையாடுவது போல் கனவு காண்கிறாள். ஆதலால் கனவில் கண்டது போல் தலைவன் விரைந்து வருவான். அவனோடு நான் மகிழ்ந்திருப்பேன் என்று தனக்குத் தானே ஆறுதல் கூறித் தன்னைத் தேற்றிக்கொள்கிறாள். அவை

**"கானல் அம் சேர்ப்பனைக் கண்டாப் போல**
**புதுவது கவினினை என்றியாபின்,**
**நனவின் வாரா நபனிலாளனைக்**

**கனவில் கண்டு, யான் செய்தது கேள், இனி**
**கனவினால் கண்டேன் - தோழி - காண்தகக்**
**கனவின் வந்த கானல் அம் சேர்ப்பன்**
**நனவின் வருதலும் உண்டுசுசு என**
**அனைவரை நின்றது, என் அரும் பெறல் உயிரே.”**
**பாடல் 128**

என்று குறிப்பிடுகிறார் புலவர்.

தலைவன் வந்தால் தன் அனைத்து துன்பங்களும் காணாமல் போய்விடும் என்று தலைவி நம்புகிறாள். அதுபோல் தலைவனும் வருகின்றான். அவள் துன்பங்களும் தீர்ந்து விடுகின்றன. இதற்கு கலவனைக் கண்ட பனி போல” என்னும் பழமொழியையும் ஒப்பிட்டுக் கூறலாம். நடுக்கடலிலே தத்தளிப்பவன் இறைவனை வணங்கும் பொழுது இறைவன் வந்து காப்பது போல் இங்கு தலைவியின் துயரத்தை தலைவன் போக்கியுள்ளான் என்பது வெள்ளிடை.

**விளையாட்டு**

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலைப் பற்றி ஆராய்வது நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புற விளையாட்டுக்கள் அவற்றின் ஒரு கூறாகும். நாட்டுப்புற மக்களின் நாகரிகத்தோடும் பண்பாட்டோடும் விளையாட்டு இணைந்ததாகும். (சு.சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு)

தலைவன் தலைவி இருவரும் இணைந்து இருக்கும் பொழுது ஒரு முறை தலைவி ஊசல் விளையாடுகிறாள். இவ்விளையாட்டில் தலைவன் தலைவியின் ஊசலை ஊக்கி விடுகிறான். தலைவன் தலைவியைப் பிரிந்திருக்கும் பொழுது ஊசலை ஊக்கிவிட முன்பு போல் தலைவன் இவ்விடத்திற்கு வருவானா என்று ஏங்கும் நிலையை எடுத்துரைக்கிறது இப்பாடல்.

**“பாட மறை நின்று கேட்டனன், நீடிய**
**வால் நீர்க் கிடக்கை வயங்க நீர்ச் சேர்ப்பனை**
**யான் என உணர்ந்து, நீ நனி மருள,**
**தேன் இமிர் புன்னை பொருந்தி,**
**தான் ஊக்கினன், அவ் ஊசலை வந்தே.”**
**பாடல் 131**

இவ்வாறு எடுத்துரைக்கிறார் புலவர்.

மேலும் பிரிவுத் துயர் பற்றி 121 பாடலும் இழிவு பற்றி 122 பாடலும் எடுத்துரைக்கிறது.

**மனிதனின் வாழ்வியல் முறை**

மனிதன் ஒரு வரைமுறைக்கு உட்பட்டு வாழும்பொழுதுதான் அவ்வாழ்க்கைச் சிறக்கும். இல்லையெனில் அவ்வாழ்வு சீரழிந்து போய்விடும். இக்கருத்தினை நாட்டுப்புற பாடல்களும் கதைகளும் எடுத்தியம்புகின்றன.

**“கேளிர்கள் நெஞ்சு அழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்**
**தாள் இலான் குடியே போல், தமியவே தேயுமால்,**
**சூள் வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின், மற்று அவன்**
**பெரிதே (பாடல் 149)**

உறவினர்கள் மனம் வருந்தும்படியாகத் தேடிக் குவித்த செல்வங்கள், முயற்சி இல்லாத மன்னவனின் குடிகள் போலத் தாமாகவே தேய்ந்து அழியும். பிறர் மனம் கொள்ளத்தக்க வகையில் சூளுரைத்த மனத்தான், தான், சூளுற்ற காரியத்தினை முடிக்காது பொய்த்துப் போவேனேயாயின், தானாகவே தேய்ந்து போவான். சூளுறவினைப் பொய்த்த தீவினை, மறுமைக்கண், வாளின் வாய் கூரிதாகவென்று சுவர்க்கம் பெற்றானாயினும் அது அவனை அழியாது விடாது என்று குறிப்பிடுவது மக்கள் எவ்வாறு ஒழுக்கமாக வாழவேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது.

**நிறைவாக**

கலித்தொகையில் நெய்தற் கலி நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் பண்புகள் முதற்கொண்டு அவர்களின் தொழில், தலைவியின் நிலை, பழமொழி, நம்பிக்கை, தெய்வத்தின் மீதான நம்பிக்கைகள், விளையாட்டு

குறித்த செய்திகள், பிரிவு, துயர் பற்றிய பாடல்கள், வரைவு நீட்டிப்பு, பாடலின் அமைப்புகள் என்று பல்வேறு பண்புகளைப் பெற்றிருக்கிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. சு.சக்திவேல் - நாட்டுப்புற இயல் ஆய்வு
2. நெடுநல்வாடை
3. கலித்தொகை
4. வ.பெருமாள், பலநோக்கில் பழமொழிகள்
5. தொல்காப்பியம்
6. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல்
7. திருப்பத்தூர் மாவட்ட பழமொழிகள்